ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

අති විශෙෂ அதிவிசேஷமானது EXTRAORDINARY

අංක 767/15 – 1993 මැයි 21 වැනි සිකුරාදා – 1993.05.21
767/15 ஆம் இலக்கம் — 1993 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
No. 767/15 – FRIDAY, MAY 21, 1993

(ආණ්ඩුවේ බලය පිට ප්‍රසිද්ධ කරන ලදී.) (அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது) (Published by Authority)

# பகுதி I: தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. — பி. 21/78 III.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்
27 (1) எனும் பிரிவின் கீழான கட்டளை

அரசியலமைப்பின் 44 (2) என்னும் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இக்கட்டளை மூலம், (இதனகத்தின் பின்னர் ' இயைபான கட்டளை ' எனக் குறிப்பீடு செய்யப்படும்) சிறீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை தொடர்பாகச் சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றெனச் சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் பயனைக் கொண்டு கருதப்படும் கட்டளையை, இயைபான கட்டளையில் எடுத்துக்காட்டப்பட்டிருப்பதாகக் கருதப்படுவனவும் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கற்கைப் பகுதிகளைக் கொண்டிருப்பனவுமான துறைகளுக்கு மருத்துவ அறிவியல் துறையைச் சேர்ப்பதன் மூலம் திருத்துகிறேன்.

டி. பி. விஜேதுங்க,
சனாதிபதி.

கொழும்பு,
1993 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி.

அட்டவணை

1. மனித உயிரினவியல் பகுதி
2. பரா நோயியல் அறிவியல் பகுதி
3. நோயியல் அறிவியல் பகுதி
4. தாதித் தொழில் பகுதி
5. சுகாதார சேவைகள் முகாமைப் பகுதி
6. மருத்துவக் கல்விப் பகுதி

06 - 96